டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.10.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 108 | Madurai | Online Edition

# அர்னாப் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

## அமைச்சரவைச் செயலாளர் தலைமையில் அவசரகால மேலாண்மைக் குழுக் கூட்டம்

புது தில்லி, அக்.26

வங்க கடலில் உருவாகும் அர்னாப் புயலை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக அமைச்சரவைச் செயலாளர் டாக்டர் டி வி சோமநாதன் தலைமையில் தேசிய அவசரகால மேலாண்மைக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விளக்கம் அளித்த இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநர், கிழக்கு மத்திய மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மேற்கு திசை நோக்கி நகர்ந்து அர்னாப் புயலாக வலுவடைந்துள்ளதாகக் கூறினார்.

இப்புயல் இன்று (அக்.27) மேற்கு-வடமேற்கு திசையிலும் அதன்பிறகு வடமேற்கு திசையிலும் நகர்ந்து ஆந்திரப்பிரதேச கடற்கரை நோக்கி செல்லும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது நாளை (அக்.28) முற்பகலில் பாபட்லா – விசாகப்பட்டினம் இடையே ஆந்திரப்பிரதேசம், ஏனம் கடற்கரைப்பகுதிகளில் கரையைக் கடக்கக்கூடும்.

அப்போது இது மிக அதிதீவிரப் புயலாக இருக்கும் என்றும் மணிக்கு 115 முதல் 125 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் அது 140 கிலோ மீட்டர் வரை அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தாக்கத்தால் தெலங்கானா, தெற்கு ஒடிசா, தெற்கு, மத்திய சட்டீஸ்கர், கிழக்கு உத்தரப்பிரதேசம், பீகார் மாநிலங்களில் மாவட்டங்கள் பாதிக்கப்படலாம்.

இதையடுத்து போதிய முகாம்களும், மீட்பு பணிகளுக்கான முன்னேற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. தேசிய, மாநில பேரிடர் மீட்புப் படைகள் தயார் நிலையில் உள்ளன. மாவட்ட கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு அவை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றன.

வங்கக் கடலில் தென்மேற்குப் பகுதி அதையொட்டி மத்தியப் பகுதி ஆந்திரப்பிரதேசம், ஒடிசா, ஏனம் (புதுச்சேரி), கடலோரப் பகுதிகளுக்கு 29-ம் தேதி வரை செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே கடலுக்குச் சென்றவர்கள் கரை திரும்பியுள்ளனர்.

ராணுவம், விமானப்படையின் மீட்பு, நிவாரண குழுக்களும் இந்திய கடலோர காவல்படை தங்களுடைய கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றுடன் தயார் நிலையில் உள்ளன.

# நெல்லுக்கு மானியம் பெற அழைப்பு!

விருதுநகர், அக்.26

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நேரடி நெல் விதைப்பு செயல்விளக்க திடல்களுக்கு ரூ.9000 மதிப்பில் உள்ள இடுப்பொருட்களான 40 கிலோ நெல் விதை வரப்பு பயிருக்கு 3 கிலோ உளுந்து, நெல் நுண்ணூட்ட உரம், பயிர் பாதுகாப்பு மருந்து, வேப்பெண்ணெய், நானோ யூரியா, நெல் பூஸ்டர் ஆகியவை வழங்கப்படுகிறது. மேலும் பயிர் முறையில் நெல்லுக்கு பின் உளுந்து சாகுபடி செய்ய விரும்பும் விவசாயி களுக்கு செயல்விளக்கு திடலுக்கு ரூ.12500 மதிப்பில் 40 கிலோ நெல்லும் 23 கிலோ உளுந்தும் இதர இடுபொருள்களும் வழங்கப்படும். மேலும் நெல் விதைகள் கிலோ ரூ.20 மானியத்தில் நெல் சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இராஜபாளையம் வட்டாரத்தில் உள்ள நெல் விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் நெல் விதைகளை வேளாண்மை விரிவாக்க மையத்தில் வாங்கி பயனடைய இராஜபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி கேட்டுக்கொள்கிறார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், அக்.26

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக 26.10.26 அன்று கம்மாபுரம், முஷ்ணம், காட்டுமன்னார் கோவில் மற்றும் குமராட்சி வட்டாரத்தில் உள்ள பெருவரப்பூர், கொக்கரசன்பேட்டை, கீழராதாம்பூர் மற்றும் திருநரையூர் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன் துவக்கிவைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழி முறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர் G.சத்திய நாராயணன், T.சுஜெய்வேலு மற்றும் P.கமலக்கண்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டசத்துக்கள் மேம்ப்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளு மாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கம்மாபுரம், முஷ்ணம், காட்டுமன்னார்கோவில் மற்றும் குமராட்சி பகுதியை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# காவேரி கூக்குரல் நடத்திய கலந்தாய்வுக் கூட்டம் 1,200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்பு!

விழுப்புரம், அக்.26

‘மரம் சார்ந்த விவசாயத்தில் அதிக லாபம் சாத்தியமே‘ என்ற தலைப்பிலான சிறப்புக் கருத்தரங்கு, காவேரி கூக்குரல் சார்பில் தென்காசி, செங்கல்பட்டு, தஞ்சாவூர், விழுப்புரம், திருவள்ளூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், கடலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், வேலூர், தூத்துக்குடி, விருதுநகர், மயிலாடுதுறை, திண்டுக்கல், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அக்டோபர் 24 சனிக்கிழமை நடைபெற்றது.

காவேரி கூக்குரல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் களப் பணியாளர்களும் இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். இக்கலந்தாய்வுக் கூட்டங்களில் தேக்கு, மலைவேம்பு, குமிழ் மர சாகுபடி பற்றி முழுமையாக விளக்கப்பட்டது. மரம் சார்ந்த விவசாயத்தில், மரங்கள் மூலம் ஒருமுறை பெரிய வருமானமும், ஊடுபயிர்கள் மூலம் தொடர் வருமானமும் பெற இயலும்.

### மறுதாம்புக்கு உகந்த மரங்கள் (Coppicing)

தேக்கு, மலைவேம்பு, குமிழ் ஆகிய மரங்கள் மறுதாம்பாக (Coppicing) வளரக்கூடியவை. இவற்றில் மலைவேம்பு 7 ஆண்டுகளிலும், குமிழ் 10 ஆண்டுகளிலும், தேக்கு 25 ஆண்டுகளிலும் அறுவடை செய்யப்படுகின்றன. முதல் அறுவடைக்குப் பிறகு, இம்மரங்களின் அடித்தண்டில் இருந்து மறுதாம்பு வளர விடுவதன் மூலம், கூடுதல் நடவுச் செலவு இல்லாமலேயே மீண்டும் ஒரு அறுவடை செய்ய முடியும்.

### மறுதாம்பு நுட்பங்கள்

மரங்களை மறுதாம்பு விடும்போது சில குறிப்பிட்ட வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் :



மரத்தை இயன்றவரை நிலத்தை ஒட்டி வெட்ட வேண்டும்.

இதனால் மறுதாம்புக் கிளைகள் மண்ணுக்கு அடியிலேயே துளிர்க்கும்; மண் அணைக்கவும் வசதியாக இருக்கும். மண் அணைக்காவிட்டால் மறுதாம்புக் கிளைகள் காற்றில் ஒடிந்துவிட வாய்ப்புள்ளது. மேலும், மரம் வெட்டிய 3 மாதங்களுக்குப் பிறகுதான் ஊடுபயிர் செய்ய வேண்டும். இல்லையெனில் ஊடுபயிர்கள் மறுதாம்பு வளர்ச்சியைத் தடுத்துவிடும்.

கருத்தரங்கில், மரம் சார்ந்த விவசாயத்தின் முக்கியத்துவம், மண்ணுக்கேற்ற மரங்களைத் தேர்வு செய்தல், மரக்கன்றுகளை நடவு செய்தல், மரங்களைப் பராமரித்தல், ஊடுபயிர் சாகுபடி உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடப்பட்டது. மரங்கள் அறுவடைக்கு வரும் வரை தொடர்ந்து வருமானம் பெற, ஊடுபயிர் சாகுபடி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும், மரம் சார்ந்த விவசாயத்தில் மிளகு சாகுபடி மூலம் கிடைக்கும் கூடுதல் வருமானம் குறித்தும் விவசாயிகள் தெரிந்துகொண்டனர்.

மரங்களைப் பராமரிப்பதில் கவாத்து (Pruning) செய்வதன் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது. மரங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப முறையாகக் கவாத்து செய்ய வேண்டும்; அளவுக்கு அதிக மாகக் கவாத்து செய்வதைத் தவிர்க்க வேண்டும். அதேபோல், கவாத்தே செய்யாமல் கிளைகளை அதிகமாக வளர விடுவதும் சரியான பராமரிப்பு முறையல்ல என்றும் விளக்கப்பட்டது.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது, ‘மாவட்ட வாரியாக நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் நாங்கள் எளிதாக வந்து செல்ல முடிகிறது. உள்ளூர் களப்பணியாளர்களை நேரடியாகச் சந்தித்துப் பேசும் வாய்ப்பும் இருப்பதால், பல தகவல்களைக் கேட்டுப் பெற முடிகிறது. இத்தகைய கருத்தரங்குகள் புதிய விவசாயிகள் பலரும் மரம் நடுவதற்கு வழிவகுக்கின்றன. நாங்களும் புதிய விவசாயி களை மரம் சார்ந்த விவசாயத்தில் ஈடுபடுத்துவோம்‘ என்று விவசாயிகள் தெரிவித்தனர்.இத்தகைய மாதாந்திரக் கூட்டங்கள் வரும் மாதங்களிலும் தொடர்ந்து நடைபெற உள்ளன. எனவே, விவசாயிகள் பெருமளவில் பங்கேற்றுப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஈஷா நாற்றுப் பண்ணைகளில் டிம்பர் மரக்கன்றுகள் விவசாயி களுக்கு ரூ.5 என்ற குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. மேலும், விவசாயிகளின் நிலத்துக்கே நேரில் சென்று, மண்ணுக் கேற்ற மரங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான இலவச ஆலோசனை களையும் காவேரி கூக்குரல் பணியாளர்கள் வழங்கி வருகின்றனர். மரக்கன்றுகளையும் ஆலோசனைகளையும் பெற உதவி எண் : 80009 80009 தொடர்பு கொள்ளலாம்.

# இப்கோ நானோ NPK – ஒரு பார்வை

சென்னை, அக்.26

இப்கோ நிறுவனம், பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து (N), மணிச்சத்து (P), சாம்பல்சத்து (K) ஆகியவற்றை உள்ளடக்கிய நானோ NPK (8:8:10%w/w) திரவ உரத்தை விவசாயிகளின் பயன் பாட்டிற்காக அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திரவ உரம், பயிர் களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளைத் துல்லியமாகவும் சமச் சீராகவும் வழங்கி, பயிர்களின் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்துப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்த உதவுகிறது.

### பயன்படுத்தும் முறை

இலைவழித் தெளிப்பு முறையில் பயிர்களுக்கு ஊட்டச்சத்துகளை வழங்கும் வகையில் இத்திரவ உரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊட்டச்சத்துகளைப் பயிர்களுக்கு நேரடியாக வழங்க உதவுகிறது.

### நன்மைகள்

**சமச்சீர் ஊட்டச்சத்து :** பயிர்களுக்குத் தேவையான NPK ஊட்டச் சத்துகளைச் சீராக வழங்க உதவுகிறது.

**ஊட்டச்சத்துப் பயன்பாட்டுத் திறன் :** பயிர்கள் ஊட்டச்சத்து களைத் திறம்படப் பயன்படுத்த உதவுகிறது.

**உள்ளீட்டுச் செலவைக் குறைத்தல் :** உரப் பயன்பாட்டைச் சிக்கனமாக மேற்கொள்வதன் மூலம் விவசாயிகளின் செலவைக் குறைக்க உதவுகிறது.

**பயிர் வளர்ச்சி :** பயிர் களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஆதரவளிக் கிறது.

**மண்வளப் பாதுகாப்பு :** உரங்களைத் திறம்படப் பயன்படுத்துவதன் மூலம் நிலையான விவ சாயத்திற்கு உதவுகிறது.

**மகசூல் மற்றும் தரம் :** சிறந்த மகசூல் மற்றும் தரமான விளை பொருட் களைப் பெற உதவு கிறது.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி



மயிலாடுதுறை, அக்.26

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் வட்டாரம், மாணிக்கபங்கு கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ், நிலக் கடலையில் ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை (Integrated Crop Management in Groundnut – ICM in Groundnut) என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் தியாகு வரவேற்புரை நிகழ்த்தினார்.

இப்பயிற்சியில் நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. குறிப்பாக, தரமான விதைகளைத் தேர்வு செய்தல், விதை நேர்த்தி செய்தல், சரியான பருவத்தில் விதைத்தல், மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல், உயிர் உரங்களைப் பயன்படுத்துதல், களை மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, நீர் மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் நிலக்கடலைப் பயிரின் வளர்ச்சியை மேம்படுத்தி, சாகுபடிச் செலவைக் குறைத்து, அதிக மகசூல் பெற முடியும் என்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து, உதவி தோட்டக்கலை அலுவலர் மணிகண்டன் கலந்து கொண்டு, தோட்டக்கலைத் துறை சார்பில் செயல் படுத்தப்படும் அரசு திட்டங்கள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் மற்றும் திட்டங்களின் மூலம் பயன்பெறும் வழிமுறைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். இறுதியாக, உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வகுமரன் நன்றியுரை கூறினார். இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை அலுவலர் வேண்டுகோள்

விழுப்புரம், அக்.26

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு! விதைகளின் தரம் பயிர் ஆரோக்கியத்தினை தீர்மானிக்கிறது, பயிர் உற்பத்தியில் ஏற்படும் அபாயங்களை குறைக்கிறது, விதைகளின் தரம் எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும். தரமற்ற விதைகளை விதைப்பதால் ஏற்படும் நேரம் மற்றும் பண விரயங்களை தடுப்பதில் விதைப் பரிசோதனை முக்கிய பங்காற்றுகிறது,

நல்ல தரமான விதைகளை அடுத்த பருவத்திற்கு சேமித்து பயன்படுத்த திட்டமிட்டால் சேமிப்பதற்கு முன். விதையின் ஈரப் பதத்தினை கண்டறிந்து பூச்சி நோய் தாக்காத அளவிற்கும். நீண்ட நாள் விதை உயிருடன் இருக்கவும் உகந்த ஈரப்பதத்தில் இருப்பது மிக அவசியம், பயிர்ருக்கு பயிர் ஈரப்பத அளவு மாறு படும், நெல் 13%, பயிர் வகை பயிர்களான உளுந்து, பாசி பயிறு 9 %, எண்ணெய் வித்து பயிர்களுக்கு 9% இருக்க வேண்டும்.

விதைகள் உபயோகிப்பதற்கு முன் முளைப்புதிறனை அறிந்து பயியிடுவது அவசியம், பயிர்களின் முறைப்பு திறன் பயிறுக்கு பயிர் மாறுபடும், அதாவது நெல் மற்றும் எள்ளுக்கு 80%. பயிர் வகை பயிர்களுக்கு 75%. நிலக்கடலை பயிருக்கு 70%. மக்காச்சோளம் 90 %. காய்கறி பயிர்களான பூசனி. வெள்ளரி. புடலை. சுரைக்காய். பரங்கிக்காய். போன்ற விதைகளுக்கு குறைந்தபட்ச முளைப்புத்திறன் 60%. இருத்தல் வேண்டும், எனவே விவசாயிகள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு பயிர் விதைக்குவியலும் விதை மாதிரி எடுத்து பகுப்பாய்வு செய்து ஈரப்பத அளவு மற்றும் முறைப்புத்திறனில் தேறியுள்ளதா என்பதை உறுதி செய்து பிறகு பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது,

விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80 – ஆய்வுக்கட்டணமாக செலுத்தி விதையின் தரம் அறிந்து கொள்ளுங்கள் என மூத்த வேளாண்மை அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் விவரங்களுக்கு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் மாடியில் இயக்கி வரும் விதைபரிசோதனை நிலையம். விழுப்புரம் என்ற முகவரியை அணுகலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது,

# இயற்கை சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் நம்மாழ்வார் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

அரியலூர், அக்.26

இயற்கை முறை விவசாய சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் நம்மாழ்வார் விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என அரியலூர் வேளாண்மை இணை ஜெ.உலகம்மை முருகக்கனி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

உயிர்ம வேளாண்மை என்பது செயற்கை ரசாயன உரம், பூச்சிக்கொல்லி ஆகியவற்றை தவிர்த்து இயற்கையுடன் இணைந்த உயிரியல் சுழற்சி, இயற்கை மற்றும் அங்கக எரு பயன்படுத்துதல் மூலம் பயிர் பாதுகாப்பு மற்றும் பயிர் சாகுபடி செய்யப்படுவதோடு மண் வளத்தையும் பாதுகாப்பது அங்கக விவசாய சாகுபடியாகும். அங்கக வேளாண்மையில் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் அங்கக கழிவுகளை நன்றாக மக்கச் செய்து, அதில் உள்ள ஊட்டச்சத்துகளை மண்ணிற்கு அளித்து பயிர்கள் கிரகித்துக் கொள்ள உதவுகின்றது. நுண்ணுயிர்கள் ஊட்டச்சத்துகளை மெதுவாகவும், சீராகவும் வெளியிடுகின்றன. இதனால் மாசற்ற சூழலில் பயிர்கள் வளர்வதனால் நஞ்சற்ற விளை பொருட்களை உற்பத்தி செய்ய முடியும்.

இயற்கை விவசாயம் செய்யும் தன்னார்வ விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்காக, 2026-2027-ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், அறிக்கை எண்.17-இல் உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கி மற்ற விவசாயிகளையும் ஊக்குவிக்கும் உயிர்ம விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்படும் என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நம்மாழ்வார் விருது பெற விரும்பும் விவசாயிகள் அக்ரிஸ்நெட் https://www.tnagrisnet.tn.gov.in வலைதளத்தில் வரும் நவம்பர் 15-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கான பதிவுக் கட்டணம் ரூ.100/- செலுத்த வேண்டும். குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் பரப்பில் உயிர்ம வேளாண்மையில் சாகுபடி செய்ய வேண்டும். குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் உயிர்ம வேளாண்மையில் ஈடுபட்டிருக்க வேண்டும். மேலும் அதற்கான சான்றும் பெற்றிருக்க வேண்டும்.

முழு நேர உயிர்ம விவசாயியாக இருத்தல் வேண்டும். வெற்றி பெறும் 5 விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசால் நம்மாழ்வார் பெயரில் விருதுடன் தலா ரூ.2 இலட்சம் ரொக்கப்பரிசு, சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்படும்.

விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விவசாயிகள், அதற்கான வழிமுறைகள் குறித்து, அந்தந்த பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.



# வடகிழக்கு பருவ மழை காலத்தில் தோட்டக்கலைப்பயிர்களை பாதுகாப்பது எப்படி?





தற்போது எதிர்பாராத வடகிழக்கு பருவமழை தொடர்ந்து சில நாட்களாக இரவு பகல் நேரங்களில் பெய்து வருகின்றது. நிலத்தில் தேவைக்கு அதிகமாக தண்ணீர் தேங்கியுள்ளது, இதுமட்டுமல்ல காற்றும் புயலும் வருவதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த கால கட்டத்தில் தோட்டக்கலை பயிர்களான மா, கொய்யா, தென்னை, வாழை, காய்கறிகள் பயிரை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதை இந்த பதிவில் விரிவாக பார்ப்போம்.

### 1) பழ வகை மரங்கள்

மா, கொய்யா, எலுமிச்சை, பப்பாளி போன்ற பயிர்கள் பயிரிடப்பட்ட நிலத்தில் வடிகால் வசதியை ஏற்படுத்தி கூடுதலான தண்ணீரை வெளியேற்ற வேண்டும். மரங்களின் தூரில் மண் அணைக்க வேண்டும். மரங்களின் அடர்த்தியை குறைக்க காய்ந்துபோன கொப்புகள், மரக்கிளைகளை அகற்றிட வேண்டும். அப்போது தான் காற்றோட்டம் ஏற்படும். இளம் செடிகளாக இருந்தால் மழை, காற்றால் பாதிக்காமல் இருக்க, தாங்கும் குச்சிகளை ஊன்றி (SUPPORT STICK) செடிகளை இதனுடன் கட்டவேண்டும். கன மழை முடிந்தவுடன் ஊட்டசத்து உரங்களை வைக்க வேண்டும்.

### 2) வாழை

வாழைத்தோட்டங்களில் அதிகப்படியான தண்ணீரை காண் வெட்டி வெளியேற்ற வேண்டும். காற்றினால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க கீழ்மட்ட இலைகளை அகற்றி விடவேண்டும்.

வாழை மரம் குலை தள்ளும் சமயங்களில், யூகலிப்டஸ், சவுக்கு மரங்களை முட்டு கொடுக்க வேண்டும், இல்லாவிடில் சாய்ந்து விடும். வாழைத்தார்களை முறையாக மூடி வைக்க வேண்டும்..75% மேல் முதிர்ந்த தார்கள் அறுவடை செய்ய வேண்டும். வாழையில் வாடல் நோயை தடுக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**3) காய்கறிகள்**

தக்காளி, மிளகாய், கத்திரி போன்ற காய்கறிகளும், பந்தல்வகை காய்கறிகளும் கன மழையால் பாதிக்கப்படும். பந்தல்களை ஸ்டே கம்பி போட்டு சாயாமல் இருக்க வலுப்படுத்த வேண்டும். அதிகப்படியான தண்ணீரை வடித்து விட வேண்டும். வறண்ட நேரத்தில் காய்கறிகளை அறுவடை செய்து விற்பனை செய்ய வேண்டும்.

**4) தென்னை மரப் பராமரிப்பு**

காற்று, புயல் போன்ற காலத்தில் தென்னையின் காய்ந்து போன ஓலை, அதிகப்படியான தேங்காய்களை வெட்டி மரத்தின் பாரத்தை (WEIGHT) குறைக்க வேண்டும். காற்று பலமாக வீசினாலும் மரம் சாயாது. மரத்தை சுற்றி வேர்கள் தெரியாமல் மண் அணைக்க வேண்டும் (MOUNDING).

**பயிர் பாதுகாப்பு முறை**

மழைக்காலத்தில் ஏற்படும் பூச்சி/நோய்களை கட்டுப்படுத்த உயிரியல் காரணிகளை (மெட்டாரைசியம்/ சூடோமோனோஸ்) பயன்படுத்தி பாதுகாக்கலாம்.

**பசுமைக்குடில்**

பசுமைக்குடிலின் கட்டமைப்பையும் பிளாஸ்டிக் உறையும் பலமாக நிலை நிறுத்தி வைக்க வேண்டும். பசுமைக்குடிலின் அடியில் தேங்கியுள்ள தண்ணீரை அகற்றிட வேண்டும். பொதுவாக காற்று தடுப்பு (WIND BREAKS) மற்றும் வடிகால் வசதி (DRIANGE) ஏற்படுத்திட வேண்டும். மழைக்காலம் முடிந்த வுடன் வளர்ச்சி குன்றிய பயிர்களுக்கு ஊட்டசத்து கரைசல் தெளிக்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பயறு வகைப் பயிர்களில் இலைப்புள்ளி நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

சேலம், அக்.26

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் பயறுவகை பயிர்களான துவரை, உளுந்து, தட்டைப்பயறு மற்றும் பாசிப்பயறு போன்ற பயிர்களில் இலைப்புள்ளி நோய் அறிகுறிகள் அதிகமாக காணப்படுகிறது.

இது குறித்து அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகப்பிரியா அவர்கள் தெரிவித்து உள்ளதாவது, அதிகப்படியான ஈரப்பதம் மற்றும் செடிகளுக்கு இடையே போதுமான இடைவெளி இல்லாமல், பயிர் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் இந்நோய் தாக்குதல் ஏற்படுகிறது. இந்நோய் செர்கோஸ்போரா கேனஸ்சன்ஸ் என்ற பூஞ்சாணத்தால் ஏற்படுகிறது.

இலைகளின் மேற்பரப்பில் அதிக எண்ணிக்கையில் வெளிரிய மையப் பகுதியையும், சிவப்பு கலந்த பழுப்பு நிற ஓரங்களையும் கொண்ட சிறு சிறு புள்ளிகள் கிளைகள் மற்றும் காய்களின் மீது தென்படும். பயிரின் பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் தருணத்தில் இலைகள் உதிர்ந்து அதிக படியான விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும். இப்பூஞ்சாணம் பாதிக்கப்பட்ட பயிர்க்கழிவுகள் மற்றும் விதைகளின் மேல் வாழும். முதல் நிலை பரவல் வித்துக்கள் மூலமும் இரண்டாம் நிலை பரவல் காற்றின் மூலமும் பரவுகிறது.

இதனை கட்டுப்படுத்த நோய் தாக்காத விதைகளை பயன்படுத்த வேண்டும் எனவும் வயல்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் மற்றும் பயிர்களுக்கு இடையே போதுமான இடைவெளி விட வேண்டும்.

காற்றின் மூலம் பரவும் இரண்டாம் நிலை பூஞ்சாண வித்துக்கள் பரவுவதை தடுக்க ஊடுபயிராக, உயரமாக வளரக்கூடிய கம்பு அல்லது சோளம் பயிரிடலாம் எனவும் நிலத்தில் பயிர் கழிவுகளைக் கொண்டு மூடாக்கு போடுவதால் நோய் தாக்குதல் குறையும் என்று அயோத்தியாப்பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பயறுவகைப் பயிர்களில் மகசூலை அதிகரிக்க பயறு ஒண்டர், DAP 2% கரைசல் தெளிப்பு!

## பூக்கும் பருவத்தில் ஊட்டச்சத்து மேலாண்மை அவசியம்



உளுந்து, பாசிப்பயறு மற்றும் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகள், பயிர்களின் பூக்கும் பருவத்தில் உரிய ஊட்டச்சத்து மேலாண்மையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பயிர்களின் வளர்ச்சிக்கும், காய்கள்பிடிப்பதற்கும், மகசூலை மேம்படுத்து வதற்கும் உதவலாம்.

## பயறுவகைப் பயிர்களில் பூக்கும் பருவம்

மகசூலைத் தீர்மானிக்கும் முக்கியமான வளர்ச்சிப் பருவமாகும். இக்காலத்தில் நிலவும் வறட்சி, அதிக வெப்பம் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற காரணங்களால் பூக்கள் உதிர்வதுடன், காய்கள் பிடிப்பதும் பாதிக்கப்படலாம். எனவே, பயிரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்துகளை வழங்குவது அவசியமாகும்.

## பயறு ஒண்டர் தெளிப்பு

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) பயறு ஒண்டர் என்பது பயறு வகைப் பயிர்களுக்காகப் பரிந்துரைக்கப்படும் சிறப்பு இலைவழி ஊட்டச்சத்து ஆகும். பயறு ஒண்டரை ஏக்கருக்கு 2 கிலோ என்றளவில், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, பயிரில் பூக்கும் உச்சப் பருவத்தில் தெளிக்க வேண்டும். இதன் பயன்பாடு பூ உதிர்வைக் குறைக்கவும், காய்கள் பிடிப்பதற்கும், மகசூலை மேம்படுத்தவும் உதவும். தயாரிப்பின் லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளையும் பரிந்துரைக்கப்பட்ட பயன்பாட்டு முறையையும் பின்பற்ற வேண்டும்.

## DAP 2% கரைசல் தெளிப்பு

பயறு ஒண்டருக்குப் மாற்றாக, சில பயறு வகைப் பயிர்களில் பூக்கும் பருவத்தில் DAP 2% கரைசலை இலைவழியாகத் தெளிக்கலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் DAP உரம் என்ற விகிதத்தில் கரைசலைத் தயாரிக்க வேண்டும். இதன்படி, 15 லிட்டர் தண்ணீருக்கு 300 கிராம் DAP உரமும், 200 லிட்டர் தண்ணீருக்கு 4 கிலோ DAP உரமும் தேவைப்படும். ம்புணே உரத்தை முந்தைய நாள் தண்ணீரில் ஊறவைத்து, மறுநாள் நன்றாகக் கலக்கி, கரையாத

துகள்களை வடிகட்டிய பின்னர் தெளிக்க லாம். பயிர் மற்றும் சாகுபடி முறைக்கேற்ப, பூக்கும் பருவத்தில் முதல் தெளிப்பையும், 15 நாட் களுக்குப் பிறகு இரண்டாவது தெளிப்பையும் மேற்கொள்ளலாம். இதற்கு மாற்றாக, பரிந்துரைக்கப் பட்டால் 2% யூரியா கரைசலையும் பயன்படுத்தலாம். மேலும், பூ உதிர்வைக் குறைப்பதற்காக ஹிபுபு 40 மி.கி./லிட்டர் அல்லது சாலி சிலிக் அமிலம் 100 மி.கி./லிட்டர் கரைசலைப் பூக்கும் முன்பும், முதல் தெளிப்பிலிருந்து 15 நாட்கள் கழித்தும் தெளிக்கலாம். இந்தப் பரிந் துரைகள் பயிரைப் பொறுத்து மாறக்கூடும் என்பதால், குறிப்பிட்ட பயிருக்கான வேளாண் துறை வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.



### தெளிக்கும் போது கவனிக்க வேண்டியவை

பயறு ஒண்டர் மற்றும் DAP கரைசலைத் தனித்தனியாகத் தெளிப்பது நல்லது. இரண்டையும் ஒன்றாகக் கலப்பதற்கு முன், தயாரிப்பின் லேபிளில் கலப்ப தற்கான அனுமதி உள்ளதா என்பதையும், அவை ஒன்றுக் கொன்று பொருந்துமா என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். DAP அல்லது யூரியா கரைசலைப் பூக்கும் பருவத்தில் தெளிப்பதுடன், NAA மற்றும் சாலி சிலிக் அமிலம் போன்ற வளர்ச்சி ஒழுங்குபடுத்திகளைப் பயன்படுத்தும் போது, குறிப்பிட்ட பயிருக்கான வேளாண் துறைப் பரிந்துரை களையும் பின்பற்ற வேண்டும்.



இலைவழித் தெளிப்பைக் காலை அல்லது மாலை நேரத்தில் மேற்கொள்வது சிறந்தது. கடுமையான வெயில் நிலவும் நேரத்திலும், பயிர்கள் நீர்ப் பற்றாக் குறையால் வாடியிருக்கும் நிலை யிலும் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மேலும், பரிந்துரைக்கப் பட்ட அளவைவிட அதிகமாகப் பயன் படுத்தக்கூடாது. இதனால் இலைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கலாம்.



பயிரின் வயது, மண்ணின் வளம், நீர்ப்பாசன வசதி மற்றும் நிலவும் வானிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஊட்டச்சத்து மேலாண்மையை மேற்கொள்வது அவசியம். சரியான பருவத்தில், சரியான அளவில், வேளாண் துறையின் பரிந்துரைப்படி பயறு ஒண்டர், DAP கரைசல் உள்ளிட்ட இடுபொருட்களைப் பயன் படுத்துவது பயிரின் வளர்ச்சிக்கும், பூக்கள் மற்றும் காய்களின் வளர்ச்சிக்கும், மகசூல் மேம்பாட்டிற்கும் உதவக்கூடும்.

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். கைபேசி எண் : 82480 80922.***



# பனமரத்துப்பட்டியில் விவசாயிகளுக்கு KCC திட்டம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி!



சேலம், அக்.26

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் (RAWE) கீழ், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் லோகேஷ், மதன், மதன்ராஜ், மணிவாசகர், முகேஷ் குமார், முகில் தர்ன், முத்துசீனி சிதம்பரம், நந்தகுமார், நட்ராஜ் ஆகியோர் விவசாயிகளுக்கு வேளாண் மைத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு உதவும் கிசான் கிரெடிட் கார்டு (KCC) திட்டத்தின் நோக்கம், பயன்பாடுகள் மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது.

விவசாயிகள் விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் பிற வேளாண் இடுபொருட்களை வாங்குவதற்குத் தேவையான கடன் உதவியை வங்கிகள் மூலம் பெறுவதற்கு இத்திட்டம் உதவுகிறது. மேலும், பயிர் சாகுபடிச் செலவுகள், அறுவடைக்குப் பிந்தைய செலவுகள் மற்றும் கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, மீன்வளம் போன்ற வேளாண் சார்ந்த தொழில்களுக்கான நிதித் தேவைகளுக்கும் KCC திட்டம் உதவுகிறது.

விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் உரிய வங்கியை அணுகிக் கடன் வசதிகளைப் பெறுவதன் முக்கியத்துவம் குறித்தும், கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதன் அவசியம் குறித்தும் மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகள் அரசின் வேளாண் நிதி உதவித் திட்டங்களை அறிந்து கொண்டு, அவற்றைப் பயன் படுத்தி தங்களது விவசாயத்தை மேம்படுத்திக் கொள்ள விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# கோரமண்டல் நிறுவனம் சார்பில் பயிர் சாகுபடி கருத்தரங்கம் மற்றும் பயிற்சி முகாம்



ஈரோடு, அக்.26

24.10.26 அன்று, கோரமண்டல் இன்டர்நேசனல் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், குகலூர் கிராமத்தில் குரோமோர் கிராமம் முதலாம் ஆண்டு விழா, பயிர் சாகுபடி கருத்தரங்கம் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கங்கள் விவசாயிகளின் முன்னேற்றம், நிலையான வேளாண்மை நடைமுறைகள், மண் வள மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, வேளாண் கடன் வசதிகள் மற்றும் நவீன நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்துவதாகும்.

கோரமண்டல் இன்டர்நேசனல் லிமிடெட் நிறுவனத்தின் ஈரோடு பகுதி வேளாண் அலுவலர் N.சோனைமுத்து வரவேற்புரை வழங்கி, நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள், வேளாண் துறை அலுவலர்கள், விஞ்ஞானிகள், நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் அனைவரையும் வரவேற்றார்.

மதுரை மண்டல மேலாளர் N.மோகன்ராஜ் சிறப்புரை மற்றும் நிறைவுரை வழங்கினார்.

கடந்த ஓராண்டில் குகலூர் கிராமத்தில் குரோமோர் கிராம் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பொறுப்புணர்வு (CSR) நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், குரோமோர் மண் பரிசோதனைச் சேவைகள், ட்ரோன் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வயல்வெளி செயல்பாடுகள் குறித்தும் விளக்கினார்.

கோபிசெட்டிபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜீவதயாளன் தனது சிறப்புரையில், சமச்சீர் உரப் பயன்பாட்டின் முக்கியத்துவம், இயற்கை உரங்களின் பயன்பாடுகள் மற்றும்

நன்மைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள் – பல்வேறு விவசாய நலத்திட்டங்கள் மற்றும் மானியங்களைப் பெறுவதற்கான உழவன் செயலியின் பயன்பாடு ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

கோபிசெட்டிபாளையம் ICAR – KVK MYRADA வேளாண் அறிவியல் மையத்தின் பயிர் பாதுகாப்புத் துறை விஞ்ஞானி டாக்டர் சீனிவாசன் உரையாற்றுகையில், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் (IPM), உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் பயன்பாடு மற்றும் பயிர்களில் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த வழிமுறைகள் குறித்து விளக்கினார். மேலும், மண் வளத்தைப் பாதுகாத்தல், மண் மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

குகலூர் பாரத ஸ்டேட் வங்கி (SBI) கிளை மேலாளர் மௌர்யா, விவசாயிகளுக்கான பல்வேறு வேளாண் கடன் வசதிகள் குறித்து விளக்கினார். பயிர் சாகுபடிக்குத் தேவையான கடன்கள், விவசாயி களுக்கான வங்கிச் சேவைகள் மற்றும் வேளாண் நடவடிக்கை களுக்குப் பயன்படும் நிதி வசதிகள் குறித்து எடுத்துரைத்தார்.

பிரீமியர் இரிகேசன் நிறுவனத்தின் ஈரோடு பகுதி மேலாளர் ஆனந்தகுமார், நவீன நீர்ப்பாசன முறைகள் குறித்து விவசாயி களுக்கு விளக்கமளித்தார். மேலும் அவர் தனது உரையில், சொட்டு நீர்ப் பாசன முறையின் பயன்பாடுகள், தெளிப்பு நீர்ப் பாசன முறையின் நன்மைகள், ரெயின் கன் (Rain Gun) நீர்ப்பாசனத் தொழில்நுட்பம், நீர் சிக்கனத்தின் முக்கியத்துவம், நுண்ணீர் பாசனக் கருவிகளை நிறுவுவதற்கான அரசு மானியங்கள் பற்றி தெரிவித்தார்.

மேலும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி பயிர்களின் வளர்ச் சியையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கான வழிமுறை களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் M.கோகுல்ராஜ், MO, ஈரோடு பகுதி, M.சதீஷ்குமார், MDT, கோபிசெட்டிபாளையம் மற்றும் தடப்பள்ளி கால்வாய் பாசன விவசாயிகள் சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தடப்பள்ளி கால்வாய் பாசன விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் 85-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

வேளாண்மைத் துறை, வேளாண் அறிவியல் மையம், வங்கி மற்றும் நுண்ணீர் பாசன நிறுவனத்தின் பிரதிநிதிகள் வழங்கிய

பயனுள்ள தகவல்களால் விவசாயிகள் பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வைப் பெற்றனர்.

குகலூர் கிராமத்தில் குரோமோர் கிராம் திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, விவசாயிகளின் தொழில்நுட்ப அறிவை மேம் படுத்தவும், நிலையான வேளாண்மை நடைமுறைகளை ஊக்கு விக்கவும், மண் வளத்தைப் பாதுகாக்கவும், நீர் மேலாண்மையை மேம்படுத்தவும் பயனுள்ளதாக அமைந்தது. கோரமண்டல் இன்டர் நேசனல் லிமிடெட் நிறுவனத்தின் குரோமோர் கிராம் திட்டத்தின் மூலம் கிராமப்புற விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக மேற் கொள்ளப்படும் செயல்பாடுகள் இதன் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டன.

## பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மற்றும் கிராம வரைபடம் தயாரித்தலில் வேளாண் கல்லூரி மாணவிகள்



திருவண்ணாமலை, அக்.26

திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சானூர், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலை யத்தின் இறுதியாண்டு மாணவிகள் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெரிய கோளப்பாடி கிராமத்தில் பங்கிருப்பு கிராமப்புற மதிப்பீட்டின் கீழ் கிராம வரைபடம் தயாரிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான கிராம மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, தயாரிக்கப்பட்ட கிராம வரைபடத்தைப் பார்வையிட்டனர். மாணவர்கள் கிராம வரைபடம் தயாரிக்கும் முறைகள், அதன் முக்கியத்துவம் மற்றும் பிரச்சனை மரம் (Problem Tree) போன்ற PRA கருவிகள் குறித்து கிராம மக்களுக்கு விளக்கமளித்தனர். மேலும், கிராமத்தில் அமைந்துள்ள முக்கிய இடங்கள், பொது வசதிகள், நீர்வளங்கள் மற்றும் பிற உள்ளூர் வளங்களின் இருப் பிடங்கள் குறித்து கிராம மக்கள் தங்களுடைய அனுபவங்களையும் தகவல்களையும் பகிர்ந்து கொண்டனர். இந்தப் பங்கிருப்பு மதிப்பீட்டின் மூலம், மாணவர்கள் கிராமத்தின் அமைப்பு, அடிப்படை வசதிகள் மற்றும் உள்ளூர் வளங்களைப் பற்றிக் கிராம மக்களின் நேரடிப் பங்களிப்புடன் அறிந்துகொண்டனர். இந்நிகழ்வு மாணவர் களுக்கும் கிராம மக்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப் படுத்தியதுடன், கிராமப்புற வளர்ச்சியில் மக்களின் பங்கேற்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சிறுதானியங்களின் மறுமலர்ச்சி

## பாரம்பரிய உணவிலிருந்து உலகளாவிய ஆரோக்கிய இயக்கம் வரை

'வரகு, சாமை, தினை, கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்கள் ஒரு காலத்தில் தமிழர்களின் அன்றாட உணவின் அடையாளமாக இருந்தன. இன்று அவை மீண்டும் ஆரோக்கியமான எதிர்கால உணவாக உலக அரங்கில் கவனம் பெற்று வருகின்றன.'

பசுமைப் புரட்சிக்குப் பிறகு நெல் மற்றும் கோதுமை சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால், சிறுதானியங்களின் சாகுபடி மற்றும் பயன்பாடு படிப்படியாகக் குறைந்தது. ஆனால் வாழ்க்கை முறை நோய்கள் அதிகரித்தல், காலநிலை மாற்றம், நீர்ப்பற்றாக்குறை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நிலையான வேளாண்மையின் அவசியம் போன்ற காரணங்களால், சிறு தானியங்கள் மீண்டும் மக்களின் உணவுத் தட்டிலும் விவசாயி களின் வயல்களிலும் இடம்பிடித்து வருகின்றன.

2023-ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை 'சர்வதேச சிறு தானிய ஆண்டு' (International Year of Millets) என அறிவித்தது. அதனைத் தொடர்ந்து உலகம் முழுவதும் சிறுதானியங்களின் சாகுபடி, பயன்பாடு மற்றும் ஆராய்ச்சி வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியா, குறிப்பாக தமிழ்நாடு, இந்த மறுமலர்ச்சியின் முன்னோடிகளில் ஒன்றாக விளங்குகிறது.

### சிறுதானியங்கள் என்றால் என்ன?

சிறுதானியங்கள் (Millets) என்பது குறைந்த நீர், குறைந்த உரம் மற்றும் குறைந்த பராமரிப்பில் வளரக்கூடிய சிறிய தானியப் பயிர்கள் ஆகும். இவை வறட்சி மற்றும் வெப்பத்தைத் தாங்கும் திறன் கொண்டவை.

### தமிழகத்தில் முக்கியமாகப் பயிரிடப்படும் சிறுதானியங்கள் :

கம்பு (Pearl Millet), கேழ்வரகு (Finger Millet), தினை (Foxtail Millet), சாமை (Little Millet), வரகு (Kodo Millet), குதிரைவாலி (Barnyard Millet), பனிவரகு (Proso Millet), இவை அனைத்தும் ஊட்டச்சத்து நிறைந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் விவசாயிகளுக்கு இலாபகரமான பயிர்களாகும்.

## ஏன் சிறுதானியங்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறுகின்றன?

### 1. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற பயிர்கள்

இன்று உலகம் முழுவதும் வேளாண்மை காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்கொள்கிறது. மழை குறைவு, அதிக வெப்பநிலை, வறட்சி, நீர்ப்பற்றாக்குறை போன்ற சூழ்நிலைகளிலும் சிறு தானியங்கள் நல்ல மகசூல் தருகின்றன. அதனால் இவை ‘Climate-Smart Crops‘ என்று அழைக்கப்படுகின்றன.

### 2. குறைந்த நீர் – அதிக பயன்

நெல் மற்றும் கரும்பு போன்ற பயிர்களுடன் ஒப்பிடும் போது சிறு தானியங்களுக்கு மிகவும் குறைந்த நீர் போதுமானது. இதனால், நீர் சேமிக்கப்படுகிறது. வறண்ட பகுதிகளிலும் சாகுபடி செய்ய முடிகிறது. மழையை மட்டுமே நம்பிய விவசாயிகளுக்கு ஏற்ற பயிராக விளங்குகிறது.

### 3. அதிக ஊட்டச்சத்து

சிறுதானியங்கள் வெறும் உணவு அல்ல; அவை ‘ஊட்டச்சத்து பொக்கிசங்கள்‘ ஆகும். இவற்றில், அதிக நார்ச்சத்து, புரதம், கால்சியம், இரும்புச்சத்து, துத்தநாகம், பி–வைட்டமின்கள், ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. கேழ்வரகில் கால்சியம் அதிக மாகவும், கம்பில் இரும்புச் சத்து மற்றும் நார்ச்சத்து அதிகமாகவும் காணப்படுகிறது.

### 4. வாழ்க்கை முறை நோய்களைத் தடுக்க உதவுகின்றன.

**இன்றைய உணவுப் பழக்க வழக்கங்களால் :** நீரிழிவு, உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள் அதிகரித்து வருகின்றன.

**சிறு தானியங்கள் :** குறைந்த Glycemic Index (GI), அதிக நார்ச்சத்து, மெதுவான சர்க்கரை வெளியீடு கொண்டதால் ஆரோக் கியமான உணவாக பரிந்துரைக்கப்படுகின்றன.

### விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகள்

குறைந்த முதலீடு.

**சிறுதானியங்களுக்கு :**

குறைந்த உரம், குறைந்த பூச்சிக்கொல்லி, குறைந்த நீர் தேவைப்படுவதால் உற்பத்திச் செலவு குறைகிறது.

### வறட்சியைத் தாங்கும் திறன்

வறண்ட மற்றும் மானாவாரி பகுதிகளில் கூட நல்ல மகசூல் தருகின்றன.

**குறுகிய காலப் பயிர்கள்**

பல சிறுதானியங்கள் 70 – 100 நாட்களுக்குள் அறுவடைக்கு வருகின்றன. இதனால், விரைவான வருமானம், இரண்டாம் பயிர் சாகுபடிக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

**குறைந்த பூச்சி மற்றும் நோய் தாக்குதல்**

பல சிறுதானியங்களில் நோய் மற்றும் பூச்சி தாக்குதல் குறைவாக இருப்பதால் இரசாயன மருந்துகளின் பயன்பாடும் குறைகிறது.

**சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பயிர்கள்**

**சிறுதானியங்கள் :** மண்ணின் வளத்தைப் பாதுகாக்கின்றன. குறைந்த கார்பன் தடயத்தை (Carbon Footprint) உருவாக்குகின்றன. குறைந்த நீர் பயன்படுத்துகின்றன. பல்லுயிர் பெருக்கத்தை ஊக்குவிக்கின்றன. இதனால் நிலையான வேளாண்மைக்கு சிறந்த தேர்வாக விளங்குகின்றன.

**உணவுப் பாதுகாப்பில் சிறுதானியங்களின் பங்கு**

எதிர்காலத்தில் உலக மக்கள் தொகை அதிகரிக்கும் நிலையில், குறைந்த வளங்களில் அதிக ஊட்டச்சத்துடன் நிலையான உணவு உற்பத்தி தேவைப்படுகிறது. இந்த தேவையை நிறைவேற்றுவதில் சிறுதானியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**இவை :** வறட்சி காலங்களிலும் விளையும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏற்றவை. கிராமப்புற ஊட்டச்சத்தை மேம்படுத்து கின்றன. உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துகின்றன.

**தாவர இனப்பெருக்கத்தின் பங்கு**

சிறுதானியங்களின் உற்பத்தியை மேலும் உயர்த்த, தாவர இனப்பெருக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

**ஆராய்ச்சியின் முக்கிய நோக்கங்கள் :** அதிக மகசூல் தரும் ரகங்கள், குறுகிய கால ரகங்கள், நோய் எதிர்ப்பு, அதிக இரும்பு மற்றும் கால்சியம் கொண்ட ரகங்கள், இயந்திர அறுவடைக்கு ஏற்ற ரகங்கள், வெப்பம் மற்றும் வறட்சியைத் தாங்கும் ரகங்கள், இவை எதிர்கால சிறுதானிய வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமாக அமையும்.

**மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் – புதிய சந்தை வாய்ப்புகள்**

இன்று சிறுதானியங்கள் பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட் களாக மாற்றப்படுகின்றன. சிறுதானிய மாவு, நூடுல்ஸ், பாஸ்தா, பிஸ்கட், குக்கீஸ், உடனடி உணவுகள், காலை உணவு தானியங்கள், பானங்கள் இவை நகர்ப்புற இளைஞர்கள் மற்றும் ஆரோக்கிய

உணவு விரும்பிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

**தமிழ்நாட்டில் சிறுதானிய வளர்ச்சிக்கான வாய்ப்புகள்**

**தமிழ்நாட்டின் வறண்ட மாவட்டங்களான :** சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் போன்ற பகுதிகளில் சிறுதானிய சாகுபடியை விரிவுபடுத்த நல்ல வாய்ப்புகள் உள்ளன. மேலும், விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO), பதப்படுத்தும் மையங்கள், ஏற்றுமதி வாய்ப்புகள், இயற்கை வேளாண்மை ஆகியவை இந்தத் துறையை மேலும் வளர்க்கும்.

**சவால்கள்**

சிறுதானிய வளர்ச்சிக்கு இன்னும் சில சவால்கள் உள்ளன. பதப்படுத்தும் வசதிகள் குறைவு, சந்தை விழிப்புணர்வு குறைவு, நுகர்வோர் பழக்க மாற்றம், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் விலை, இயந்திரமயமாக்கல் தேவைகள்.

இந்த சவால்களை அரசு, ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில் முனைவோர் மற்றும் விவசாயிகள் இணைந்து சமாளிக்க வேண்டும்.

**எதிர்காலப் பாதை**

**சிறுதானியங்களின் மறுமலர்ச்சியை நிலைநிறுத்த :** பள்ளி மற்றும் கல்லூரி உணவுத் திட்டங்களில் சேர்த்தல், பொது விநியோக அமைப்பில் (PDS) அதிகப்படுத்துதல், மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவித்தல், புதிய ரகங்களை உருவாக்குதல், விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்குதல், ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் அவசியம்.

**முடிவுரை**

சிறுதானியங்கள் என்பது கடந்த காலத்தின் பாரம்பரிய உணவு மட்டுமல்ல; எதிர்காலத்தின் அறிவார்ந்த உணவும், நிலையான வேளாண்மையின் அடையாளமும் ஆகும். காலநிலை மாற்றம், நீர்ப்பற்றாக்குறை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற உலகளாவிய சவால்களுக்கு இயற்கை வழங்கிய சிறந்த தீர்வுகளில் ஒன்றாக சிறுதானியங்கள் விளங்கு கின்றன. அறிவியல் ஆராய்ச்சி, தாவர இனப்பெருக்கம், மதிப்புக் கூட்டப்பட்ட தயாரிப்புகள், நவீன சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு ஆகியவை ஒருங்கிணைந்தால், சிறு தானியங்களின் மறுமலர்ச்சி ஒரு தற்காலிக இயக்கமாக இல்லாமல், இந்திய வேளாண்மையின் புதிய வளர்ச்சிப் பாதையாக மாறும்.

'சிறுதானியங்களை விதைப்பது ஒரு பயிரை மட்டும் வளர்ப்ப தல்ல; ஆரோக்கியமான மக்களையும், வளமான விவசாயத்தையும், நீடித்த சுற்றுச்சூழலையும் உருவாக்கும் முதலீடாகும்.'

கட்டுரையாளர்கள் : *வெங்கடேஷ் ம, முதுநிலை உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா ரா, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி –621 104.*

# நெல்லில் பேசில்லஸ் சப்டில்லிஸ் கொண்டு விதை நேர்த்தி செயல்விளக்கமளித்த செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், அக்.26

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின், ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன் மற்றும் வினோத் குமார் ஆகியோர் மகிழஞ்சேரி கிராமத்தில் விதை நேர்த்தியின் முக்கியத்துவம் மற்றும் அதன் செயல் முறைகள் குறித்த செயல்விளக்கம் அளித்தனர்.

விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் அவற்றைக் கட்டுப் படுத்துதல், விதைகளின் முளைப்புத்திறனை மேம்படுத்துதல், ஆரோக்கியமான நாற்றுகளைப் பெறுதல் மற்றும் பயிர்களின் ஆரம்பகால வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றில் விதை நேர்த்தியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

மேலும் உயிரியல் முறையில் பேசில்லஸ் சப்டில்லிஸ் என்ற உயிரிக்கட்டுப்பாட்டுகாரணியை 10 கிராம் / 1 கிலோ நெல் விதை

என்ற அளவில் எடுத்து விதை நேர்த்தி செய்து விவசாயிகளுக்கு விளக்கினர். விதை நேர்த்தி முறைகளை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் விதை மூலம் பரவும் நோய்களின் தாக்கம் குறைக்கப் பட்டு, ஆரோக்கியமான பயிர் வளர்ச்சியும் மேம்படுத்தப்பட்ட மகசூல் வாய்ப்புகளும் பெறலாம் என்பது குறித்தும் விவசாயி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!


